

திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் சாலையில் அமைந்துள்ள மன்னர் பேரரசர் பெரும்பிடுகு முத்தரையர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு அவரது 1350 வது பிறந்த நாள் விழாவினை முன்னிட்டு தமிழ்நாடு அரசின் சார்பில் நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் நேற்று (23.05.2025) மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இந்நிகழ்வில் மத்திய மாவட்ட செயலாளர் வைரமணி, மாவட்ட ஆட்சித்தலைவர் மா.பிரதீப் குமார், மாநகராட்சி மேயர் மு.அன்பழகன் மாநகராட்சி ஆணையர் வே.சரவணன், சட்டமன்ற உறுப்பினர்கள் ந.தியாகராஜன், செ.ஸ்டாலின் குமார், எம்.பழனியாண்டி, சீ.கதிரவன், முத்து செல்வம், சேர்மன் துரைராஜ், மாத்தூர் கருப்பையா, விஜய் ஜெயராஜ், காஜாமலை விஜய், ஆனந்த் குடமுருட்டி சேகர், உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### ‘சர்வதேச உயிரியல் பன்முகத் தன்மை’ தினம் – 2025

# சிறப்பாகப் பணியாற்றிய களப் பணியாளர்களுக்கு விருதுகள்!

## அமைச்சர் ஆர்.எஸ். ராஜ கண்ணப்பன் வழங்கினார்!

சென்னை, மே 24 -

ஒவ்வொரு ஆண்டும் மே 22 ஆம் தேதி சர்வதேச உயிரியல் பன்முகத்தன்மை தினமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த நாளை நினைவுகூரும் வகையில், தமிழ்நாடு வனத்துறை 2025 மே 22 ஆம் தேதி ஒரு கருத்தரங்கு நேற்று முன்தினம் (22.05.2025) சென்னை தி.நகரில் உள்ள கிராண்ட் ஜி.ஆர்.டி ஹோட்டலில் நடைபெற்றது. கருத்தரங்கு நடைபெற்ற வளாகத்தில் அமைக்கப்பட்டிருந்த, வனப்பயன்பாட்டுப் பொருட்கள் மற்றும் புத்தகங்கள் / அறிக்கைகள் காட்சிப்படுத்தப்பட்டிருந்த அரங்குகளையும் வனம் மற்றும் கதர் துறை அமைச்சர் பார்வையிட்டார்.

ஆர். எஸ். ராஜகண்ணப்பன் இக்கருத்தரங்கினைத் தொடங்கி வைத்து கருப்பொருள் குறிப்பினை வெளியிட்டு சிறப்புரையாற்றினார்கள். வனம் மற்றும் கதர் துறை அமைச்சர் தமிழ்நாடு வனத்துறையின் ஆராய்ச்சிப் பிரிவின் வன மரபியல் கோட்டத்தினால் அடையாளம் காணப்பட்டு சேகரிக்கப்பட்ட அரிய பூர்வீக புல் விதைகளையும் வெளியிட்டார்கள்.

பல்வேறு பணிகளில், குறிப்பிடத்தக்க பங்களிப்பை ஆற்றிய வன அலுவலர்கள் மற்றும் களப்பணியாளர்களுக்கு அமைச்சர் அவர்களால் விருதுகள் வழங்கப்பட்டது. வனத்துறையால் நடத்தப்படும் பழங்குடியினப் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களுக்கு அதிக தேர்ச்சி சதவீதத்தைப் பெற்றதற்காகவிருதுகளும், இயற்கைப் பாதுகாப்பில் பங்களிக்கும் அமைப்புகளுக்கும் விருதுகள் வழங்கப்பட்டன.

வனம் மற்றும் கதர்த் துறை அமைச்சர், ஆர். எஸ். ராஜகண்ணப்பன் காடுகள் மற்றும் வனவிலங்குகளைப் பாதுகாப்பதன் முக்கியத்துவத்தை விரிவாக எடுத்து கூறினார். அதே நேரத்தில், பழங்குடியினர் பகுதிகளில் சாலை வசதிகள், அடிப்படை வசதிகள் வழங்கும் திட்டங்களை முறையாக செயல்படுத்துவதன் மூலம் பொது மக்கள் பெருமளவில் நன்மைகளைப் பெற முடியும் என்பதையும் மனதில் கொள்ள வேண்டும் என அறிவுறுத்தினார்.

தமிழ்நாடு உயிர்ப்பல்வகைமை வாரியத்தின் கீழ் 13,600 பல்லுயிர் மேலாண்மைக் குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளது என்றும், ரூ.2.06 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளதாகவும், பயனாளிகளுக்கு ரூ.53.42 லட்சம் விநியோகிக்கப் பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்கள். பலதரப்பட்ட விலங்கினங்கள் மற்றும் தாவரங்களைப் பாதுகாப்பதன் முக்கியத்துவத்தையும், தமிழ்நாடு வனத்துறை நாட்டின் அதன் உயர் நிலையில் உள்ளதனை தொடர்ந்து உறுதி செய்வதையும் அமைச்சர் வலியுறுத்தினார்கள்.

இந்த நிகழ்வின் போது, சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றத் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி சுப்ரியா சாகு, தனது தலைமையுரையில் கடந்த நான்கு ஆண்டுகளில் தமிழ்நாடு வனத்துறையின் பல சாதனைகளை விவரித்தார். இதில் திண்டுக்கல்லில் உள்ள தேவாங்குகள் (Slender Loris) சரணாலயம் அறிவிக்கப்பட்டது, மதுரை மாவட்டத்தில் அரிட்டாபட்டி பல்லுயிர் பாரம்பரிய தளம் மற்றும் திண்டுக்கல் மாவட்டத்தில் காசம்பட்டி புனித தோப்பு பல்லுயிர் பாரம்பரிய தளம் ஆகிய இரண்டு பல்லுயிர் பாரம்பரிய தளங்கள் அறிவிக்கப்பட்டது ஆகியவை அடங்கும். 2030 ஆம் ஆண்டுக்குள் நிலப்பரப்பில், 30% காடு மற்றும் மரங்களின் பரப்பளவை நாம் எய்த வேண்டும் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட கட்டளை என்றும் அவர் கூறினார். வனத்துறை அதிகாரிகள் மற்றும் களப்பணியாளர்களின் முயற்சிகளையும் அவர் வெகுவாக பாராட்டினார், மேலும் தொடர்ந்து தங்களின பணிகளை மேலும் சீரிய முறையில் தொடர வேண்டும் என்றும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் பல்லுயிர் பெருக்கம், பறவைகள் கணக்கெடுப்பு, கிழக்குத் தொடர்ச்சி மலைகளில் மனித யானைகள் மோதல் குறித்த புத்தகங்கள் மற்றும் சுவரொட்டிகளும் வெளியிடப்பட்டன.

இந்த நிகழ்ச்சியில், சர்வதேச பல்லுயிர் பெருக்க தினத்தை முன்னிட்டு அறிஞர்கள் பங்கேற்று பல்வேறு தலைப்புகளில் உரையாற்றினர்.

இவ்விழாவில், அரசு உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

### நாமக்கல் மாவட்டம் இராசிபுரம் சட்டமன்றத் தொகுதியில்

# ரூ.5.63 கோடி மதிப்பில் 21 புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் - 4 முடிவுற்ற திட்டப்பணிகள்!

## அமைச்சர் – மருத்துவர் மா.மதிவேந்தன் திறந்து வைத்தார்!

நாமக்கல் மே 24 -

நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் சட்டமன்ற தொகுதி, இராசிபுரம், நாமகிரிப்பேட்டை ஊராட்சி ஒன்றியங்களுக்குட்பட்ட பகுதிகளில் ரூ.4.68 கோடி மதிப்பீட்டில் 21 புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, ரூ.95.00 இலட்சம் மதிப்பீட்டில் 4 முடிவுற்ற திட்டப்பணிகளை ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் திறந்து வைத்தார்.

இராசிபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் சிங்களாந்தபுரம், கனகபொம்மன் பட்டி, போடிநாயக்கன் பட்டி, காக்காவேரி, பட்டணம் முனிப்பம்பாளையம், சந்திரசேகரபுரம், முருங்கப் பட்டி, கூனவேலம்பட்டி, பொன்குறிச்சி உள்ளிட்ட ஊராட்சிகளில் ரூ.1.33 கோடி மதிப்பீட்டில் 11 சிமெண்ட் கான்கிரிட் சாலைகள் மற்றும் 4 ஓரடுக்கு கப்பி சாலைகள் அமைக்கும் பணி, அரசபாளையம் மற்றும் பொன்குறிச்சி ஊராட்சிகளில் முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.2.27 கோடி மதிப்பீட்டில்தார்சாலை அமைக்கும் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

தொடர்ந்து, வடுகம் ஊராட்சியில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித்திட்டத்தின் கீழ் ரூ.17.85 இலட்சம் மதிப்பீட்டில் விவசாய தானிய விளைபொருள் சேமிப்புக் கூடம், காக்காவேரி ஊராட்சி, புதிய காலனி பகுதியில் ரூ.16.55 இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்டுள்ள அங்கன்வாடி மையத்தை திறந்து வைத்து, குழந்தைகளுக்கு இனிப்புகள் வழங்கினார்.

மேலும், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின் கீழ் மோளப்பாளையம் ஊராட்சியில் ரூ.30.00 இலட்சம் மதிப்பீடு மற்றும் கனகபொம்மன்பட்டி ஊராட்சி, சின்னப்பநாயக்கன்பட்டியில் புதியதாக கட்டப்பட்டுள்ள ஊராட்சி மன்ற அலுவலக கட்டடங்கள் என மொத்தம் இராசிபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் ரூ.3.40 கோடி மதிப்பீட்டில் 19 புதிய திட்டப்பணிக ளுக்கு அடிக்கல் நாட்டி, ரூ.95.00 இலட்சம் 4 முடிவுற்ற திட்டப் பணிகளை அமைச்சர் மருத்துவர்மா.மதிவேந்தன் திறந்து வைத்தார்.

நாமகிரிப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், மூலப்பள்ளிபட்டி மற்றும் பெரப்பன்சோலையில் முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், ரூ.1.68 கோடி மதிப்பீட்டில் புதிய சாலை அமைக்கும் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

இந்நிகழ்ச்சிகளில் ஒன்றிய திமுக செயலாளர்கள் கே.பி.இராமசுவாமி, கே.பி.ஜெகநாதன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் சு.வடிவேல், ஆகியோர் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



கோவை கோனியம்மன் திருக்கோவிலில் கோவை மாவட்ட அறங்காவலர் அறங்காவலர் குழு தலைவராக மெட்டல் ராஜாமணி உறுப்பினர்களாக சு.தனபால், கர்ண பூபதி, கவிதா கல்யாணசுந்தரம், பார்த்திபன் மயில்சாமி ஆகியோர் பொறுப்பேற்றுக் கொண்டனர். அவர்களுக்கு மாநகர் மாவட்டச் செயலாளர், சிங்காநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் முன்னாள் நா.கார்த்திக், தெற்கு மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன் வாழ்த்துக் கூறினார். இதில் மாநகர் மாவட்ட துணைச் செயலாளர் கோட்டை அப்பாஸ், பொதுக்குழு உறுப்பினர்கள் ரகு துரைராஜ், எஸ்.எம்.டி.கல்யாணசுந்தரம், கோனியம்மன் திருக்கோவில் அறங்காவலர் குழு தலைவர் வி.லட்சுமணன், உறுப்பினர்கள் வி. ஆர்.வெங்கடேஷ், வைரமணி, கண்ணதாசன், டவுன் பா.ஆனந்த், கேசவன், ராஜா உள்பட கழக நிர்வாகிகள், இந்து சமய அறநிலையங்கள் துறை அலுவலர்கள் பலர் உள்ளனர்.




திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக செயற்குழு கூட்டம் உடுமலை சின்னவீரம்பட்டியில் அமைந்துள்ள திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக அலுவலகத்தில் திருப்பூர் கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தலைமையில் திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத் தலைவர் இல.பத்மநாபன், மாவட்ட அவைத் தலைவர், மடத்துக்குளம் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் இரா.ஜெயராமகிருஷ்ணன், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சட்டமன்ற தொகுதி தேர்தல் பொறுப்பாளர், திண்டுக்கல் மேற்கு மாவட்டக் கழக செயலாளரும், உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல்துறை அமைச்சருமான அர.சக்கரபாணி கலந்து கொண்டு உரையாற்றினார். இதில் சட்டமன்ற தொகுதி பார்வையாளர், கழக தகவல் தொழில்நுட்ப அணி துணை செயலாளர் அ.தமிழ்மறை உள்பட தலைமை செயற்குழு, பொதுக்குழு, உறுப்பினர்கள், மாநில, நிர்வாகிகள், மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், கழக செயலாளர்கள், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

### மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தலைமை!

# விழுப்புரம் வடக்கு மாவட்டத்தை தி.மு.க.வின் கோட்டையாக மாற்ற தீவிரமாகப் பணியாற்றுவீர்!

## மாவட்ட செயற்குழுக் கூட்டத்தில் – அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம் பேச்சு!

திண்டிவனம் மே 23.

தமிழ்நாட்டில் உள்ள 234 தொகுதிகளிலும் திமுக வெற்றி பெறுவதற்கு தகுதி உள்ளதாகவும் மக்களுடைய பிரச்சினைகளை முன் நின்று கேட்பவர்கள் திமுகவினர் அந்த வகையில் மக்களுடைய பிரச்சினை களை தினம்தினம் தீவிரமாக கண்காணித்து அவர்களுடைய பிரச்சனைகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்நிவர்த்தி செய்து வருவதாக

திண்டிவனத்தில் நடைபெற்ற விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுகசெயற்குழு கூட்டத்தில் அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம்தெரிவித்தார்.

தமிழகத்தில் அடுத்த ஆண்டு சட்டமன்ற தேர்தல் நடைபெற உள்ள நிலையில், மண்டல வாரியாக தேர்தல் பொறுப்பாளர்களை நியமித்து தமிழ்நாடு முதலமைச்சர், திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

அந்த வகையில் விழுப்புரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள செஞ்சி, மைலம், திண்டிவனம் ஆகிய தொகுதிகளுக்கு உள்ளடங்கிய மண்டல தேர்தல் பொறுப்பாளராக வேளாண் மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர். கே. பன்னீர்செல்வம் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில்விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுக செயற்குழுஆலோசனை கூட்டம்திண்டிவனத்தில் உள்ள ஹோட்டல் ஆர்யாஸ் மினியாவில் நடைபெற்றது.

விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளரும், செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி மஸ்தான் தலைமை தாங்கினார்.

தொகுதி பார்வையாளர்கள் செஞ்சி கார்த்திகேயன், மயிலம் இள. புகழேந்தி, திண்டிவனம் ஜாஃபர் அலி ஆகியோர் முன்னிலை வகித்தனர். விழுப்புரம் வடக்கு மாவட்ட அவை தலைவர்



டாக்டர் சேகர் அனைவரையும் வரவேற்றார்.

கூட்டத்தில்மண்டல பொறுப்பாளரும், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் கலந்து கொண்டு எதிர்வரும் 2026 சட்டமன்ற தேர்தலில் மேற்கொள்ள வேண்டிய பணிகள், நான்கு ஆண்டு சாதனைகள்,கழக ஆக்கப்பணிகள் உள்ளிட்டவைக் குறித்து எடுத்துரைத்தார்.

கூட்டத்தில்மண்டல பொறுப்பாளரும் வேளாண் மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம். ஆர்.கே. பன்னீர் செல்வம் பேசுகையில்,

எதிர்வரும் சட்டமன்றத் தேர்தலில் வாக்காளர்களிடம் வாக்கு கேட்க திமுகவுக்கு அனைத்து வகையிலும் தகுதியுள்ளதாகவும்,

கடந்த நான்கு ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்ட அனைத்து நல திட்டங்களைஅனைத்து திமுக நிர்வாகிகள் பொது மக்களிடத்தில் வீடு வீடாக சென்று கூறி பிரச்சாரம் செய்து வாக்குகளாக மாற்ற வேண்டும் எனவும், அணிவாரியாக அனைவரும் ஒருங்கிணைந்துஊர் கூடி தேர் இழுத்து எதிர் வரும் 2026 சட்டமன்றத் தேர்தலில் விழுப்புரம் வடக்கு மாவட்டம் திமுகவின் கோட்டையாக மாற்ற அனைவரும் செயல்படுவோம் என தெரிவித்தார் மேலும்முதலமைச்சரின் சாதனைகளை எடுத்துக் கூறி வாக்கு சேகரிக்க வேண்டும் கடந்த நாடாளுமன்ற தேர்தலில் மக்கள் அனைவரும் வரவேற்றார்கள் பெண்கள் எழுச்சியுடன் ஆரவாரத்துடன் நாம் வாக்கு சேகரித்து சென்றபோது வரவேற்றனர் .தமிழ்நாடு முதலமைச்சர் நல்ல ஆட்சியை கொடுத்து உள்ளார்.மக்களுடைய பிரச்சினைகளை முன் நின்று கேட்பவர்கள் திமுகவினர்.அந்த வகையில் மக்களுடைய பிரச்சினைகளை தீவிரமாக முதலமைச்சர் கண்காணித்து அவர்களுடைய பிரச்சனைகளை முதலமைச்சர் நிவர்த்தி செய்து வருகிறார். சோசியல் மீடியா மூலம் போர் நடைபெற்று வருகிறது அதை நாம் முறியடிக்க வேண்டும் முதலமைச்சரின் சாதனைகளையும் திட்டங்களையும் கிராமத்தில் உள்ள மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும்என அமைச்சர் எம். ஆர். கே. பன்னீர்செல்வம் தெரிவித்தார்.

தொடர்ந்து செய்தியாளர்களிடம் அவர் கூறுகையில்,

தமிழ்நாட்டில் 234 தொகுதிகளிலும் திமுக வெற்றி பெறுவதற்கு தகுதியுள்ளது.

கொரோனா காலங்களில் பொதுமக்களை நேரில் சந்தித்து உதவி செய்யாத பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் டாக்டர் ராமதாஸ் மற்றும் அன்புமணி ராமதாஸ் ஆகியோர் சட்டமன்றத் தேர்தலில் படுத்துக் கொண்டே ஐம்பது தொகுதிகளில் வெற்றி பெற போவதாக தெரிவித்து இருக்கிறார்கள். மக்களை சந்திக்காத அவர்கள் எப்படி 50 தொகுதிகளில் வெற்றி பெற முடியும் என்று கேள்வி எழுப்பிய அமைச்சர் எம் ஆர் கே பன்னீர்செல்வம் முன்னாள் முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி மற்றும் சினிமா நடிகர்கள் யாரும் கரோனா காலங்களில் மக்களை நேரில் சந்தித்து உதவி செய்யவில்லை என்று கூறினார்.

திமுக ஆட்சி காலத்தில் கரோனா பரவிய போது முதல்வர் மு.க.ஸ்டாலின் மருத்துவமனை களில் பாதிக்கப்பட்டவர்களை நேரில் சந்தித்து ஆறுதல் கூறிய துடன், தக்க மருத்துவ உதவிகளை செய்ய வலியுறுத்தினார் என்று கூறினார்.

கடந்த பத்தாண்டு கால அதிமுக ஆட்சியில் விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்காத நிலையில் திமுக ஆட்சியில் ஒன்றரை லட்சம் விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கப்பட்டுள்ளதாகவும்

1 கோடியே 15 லட்சம் பெண்களுக்கு மாத மாதம் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை வருகிறது. தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் ஆட்சியில் தனி நபர்கள் பணம் பயன் பெற்று வருகின்றனர். பொருளாதார ரீதியாக கிராமம் வளர்ந்து, நகரம் வளர்ந்து, இளைஞர்கள் படித்துஅவர்கள் வேலை வாய்ப்பு பயிற்சி பெற்று வேலைக்கு சென்று பொருளாதாரத்தில் முன்னேற்றம் அடைந்து வருவதாக அவர் தெரிவித்தார்.

கூட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேது நாதன், செந்தமிழ் செல்வன், மாநில தீர்மான குழு உறுப்பினர் செஞ்சி சிவா, செயற்குழு உறுப்பினர்கள் விஜயகுமார், நெடுஞ்செழியன், சீனிராஜ், மாவட்டத் துணை செயலாளர் ரவிக்குமார் ,அமுதா ரவிக்குமார், அருணகிரி,பொதுக்குழு உறுப்பினர்கள் மணிவண்ணன், செல்வ ராஜ், வீடுர் ரவி, சாந்தி ஏழுமலை, கதிரேசன், பாலகிருஷ்ணன், ஒன்றிய செயலாளர்கள் சொக்கலிங்கம், அண்ணாதுரை ,ராஜா ராமன், விஜய ராகவன், துரை, நாராயண மூர்த்தி, இளம்வழுதி, சாந்தி சுப்பிர மணியன், மணிமாறன், செழியன், தயாளன், பழனி, ரவிச்சந்திரன், பேரூர் செயலாளர்கள் கார்த்திக், சம்பத்உள்ளிட்ட திமுக நிர்வாகி கள் கலந்து கொண்டனர். திண்டிவனம் நகர செயலாளர் ஆசிரியர் கண்ணன் அனைவருக்கும் நன்றி கூறினார்.




கோயம்புத்தூர் மாவட்டம் ஆர்எஸ்.புரம் விற்பனை அலுவலக வளாகத்தில் பன்னீர் (PANEER HUT) ஐ பால்வளத்துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ் துவக்கி வைத்தார். இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் பவன்குமார் க.கிரியப்பனவர், பொது மேலாளர் டாக்டர்.ஆர்.சண்முகம், துணை பதிவாளர்(பால்வளம்) ப.செந்தில்குமார், கோவை மாநகர் மாவட்டச் செயலாளர், சிங்காநல்லூர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் நா. கார்த்திக், கழக தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் அ.தமிழ்மறை உள்பட பலர் கலந்து கொண்டனர்.